

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 32 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.32.74 இலட்சம் மதிப்பீட்டில் இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் வழங்கினர். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல. பத்மநாபன், துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் வசந்த ராம்குமார், வடக்கு மாநகரப் பொறுப்பாளர் ஈ.தங்கராஜ், கழக விவசாய தொழிலாளர் அணை துணை செயலாளர் ச.ராஜசேகரன், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் கீர்த்தி சுப்ரமணியம், பல்லடம் நகர கழக செயலாளர் நா.ராஜேந்திரகுமார் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



கோவை ஜே.ஆர்.ரெசிடன்சி அரங்கில் பீளமேடு பகுதி 1 வட்டக் கழகச் செயலாளர்கள், BLA2 பாகமுகவர்கள் கூட்டம் சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் முத்துவேல் ராமசாமி முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநகர் மாவட்டச் செயலாளர், நா.கார்த்திக் ஆலோசனைகளை வழங்கினார். இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் வே.பாலசுப்பிரமணியம், பொதுக்குழு உறுப்பினர் இரா.மணிகண்டன், பகுதி செயலாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன், வட்டக் கழகச் செயலாளர்கள் ஏ.எஸ்.நடராஜ், ஆ.மாடசாமி, கி.நாராயணன், இளைஞர் அணி துணை அமைப்பாளர் க.மணிகண்டன், சிங்காநல்லூர் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் ஜேசுதாஸ், அன்சாரி உள்பட BLA2 பாகமுகவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### திருவாரூர் - கொரடாச்சேரி ஒன்றியங்களில்

# ரூ.2.53 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டிடங்கள்!

## பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.திறந்து வைத்தார்

திருவாரூர், ஜூன்16-

திருவாரூர் தொகுதிக்குட்பட்ட கொரடாச்சேரி ஒன்றியங்களில் ரூ.2 கோடியே 52 இலட்சத்து 89 ஆயிரம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சிமன்ற அலுவலக கட்டிடங்கள், அங்கன்வாடி மையங்கள், பொது விநியோக கடை கட்டிடங்கள், உடற்பயிற்சி கூடம் மற்றும் பயணிகள் நிழலகத்தினை சட்டமன்ற உறுப்பினர் பூண்டி. கே.கலைவாணன் திறந்து வைத்தார்.

கொரடாச்சேரி ஒன்றியப்பகுதிகளைசேர்ந்த களத்தூர் ஊராட்சியில், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.8 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள உடற்பயிற்சி கூடத்தினையும், மேலராதாநல்லூர் ஊராட்சியில், மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.15.49 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள பொது விநியோக கடை கட்டிடத்தினையும்.

பருத்தியூர் ஊராட்சியில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.13.15 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள பொது விநியோக கடை கட்டிடத்தினையும், தேவர்கண்டநல்லூர் ஊராட்சியில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் மற்றும் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டங்களின் கீழ் ரூ.16.79 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள புதிய அங்கன்வாடி மையம் கட்டிடத்தினையும்.

காட்டூர் ஊராட்சியில், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.1.25 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள பொது விநியோக கட்டிடத்தினையும், நாகக்குடி ஊராட்சி பண்ணைவிளாகம் கிராமத்தில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டங்களின் கீழ் ரூ.16.79 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள புதிய அங்கன்வாடி மையம் கட்டிடத்தினையும்,

நாகக்குடி ஊராட்சியில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.28.02 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சிமன்ற அலுவலக கட்டிடத்தினையும், அரசவனங்காடு ஊராட்சியில், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.7 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள பயணிகள் நிழலகத்தினையும்,

எண்கண் ஊராட்சியில், மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.22.65 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சிமன்ற அலுவலக கட்டிடம் என மொத்தம் ரூ.2 கோடியே 52 இலட்சத்து 89 ஆயிரம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்.

அதனைத்தொடர்ந்து கொரடாச்சேரி ஒன்றியம் திருமதிக்குன்னம் ஊராட்சியில் சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாமினை பூண்டி.கே.கலைவாணன் தொடங்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்வுகளில் ஒன்றிய செயலாளர் ஆர். பாலச்சந்திரன், சேகர் கலியபெருமாள், பூண்டி. கே.கலைவேந்தன் மற்றும் அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் உடன் பங்கேற்றனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம் செட்டிக்கரை அரசு பொறியியல் கல்லூரி அருகில் சிறப்பான முறையில் இயங்கி வரும் கலைஞர் நூலகத்தில் போட்டி தேர்வுக்கு படித்து அரசு பணி, மற்றும் வங்கி பணிக்கு தேர்வு பெற்று பணியில் இணைந்த வங்கி அலுவலர் சி.நவீன், வருவாய் துறை அலுவலர் சி.முருகன்,நீதித்துறை அலுவலர் திருமதி ஆ.சத்தியபாமா, கிராம நிர்வாக அலுவலர் எஸ்.செல்வகணபதி, ஆகியோருக்கு தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் பொன்னாடை அணிவித்து,தென்னங்கன்று வழங்கி பாராட்டினார். உடன் ஒன்றிய செயலாளர்கள் கே.பி.சக்திவேல்,மாது,பிரபுராஜசேகர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.சிவகுரு,உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

## ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

தூத்துக்குடி வடக்கு, திண்டுக்கல் மேற்கு, கிருஷ்ணகிரி கிழக்கு மற்றும் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 16.06.2025 திங்கள்கிழமை | காலை 10.00 மணி | கிருஷ்ணகிரி மேற்கு | ஆனந்த் கிராண்ட் பேலஸ், சிஷ்யா பள்ளி அருகில், தளி சாலை, ஓசூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 13-06-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

### சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க

# பாகநிலை முகவர்கள் (BLA-2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), பூத் டிஜிட்டல் ஏஜெண்ட்(BDA) ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட கழக செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பு!



கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, "ஓரணியில் தமிழ்நாடு" முன்னெடுப்பின் கீழ் கழக உறுப்பினர் சேர்க்கை குறித்து சேலம் மேற்கு மாவட்டம் - எடப்பாடி, சங்ககிரி, மேட்டூர் ஆகிய சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் வாக்குச்சாவடி வாரியாக பாகநிலை முகவர்கள் (BLA-2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் (BDA), மகளிர் அணி நிர்வாகிகள், தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், சேலம் மேற்கு மாவட்ட கழக அவைத்தலைவர் திரு. பி.தங்கமுத்து அவர்கள் தலைமையில், எடப்பாடி தொகுதி பார்வையாளர் - மாநில வர்த்தக அணி இணை செயலாளர் திரு.நா.முருகவேல், சங்ககிரி தொகுதி பார்வையாளர் - மாநில சுற்றுசூழல் அணி துணை செயலாளர் திரு.ஆர்.பி. செந்தில்குமார், மேட்டூர் தொகுதி பார்வையாளர் - மாநில மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர் திருமதி அ.ரியா ஆகியோர் முன்னிலையில் கீழ்கண்ட நிகழ்ச்சி நிரல்படி நடைபெற உள்ளது.

### எடப்பாடி தொகுதி

| தேதி / நேரம் | ஒன்றியம்/ நகரம் | இடம் |
|---|---|---|
| 17.06.2025 காலை 9.00 | நங்கவள்ளி மத்திய ஒன்றியம் மேச்சேரி கிழக்கு ஒன்றியம் (குட்டப்பட்டி ஊராட்சி) | ரங்கண்ண திருமண மண்டபம், வனவாசி |
| 17.06.2025 காலை 11.00 | நங்கவள்ளி தெற்கு ஒன்றியம் | ராமலிங்க செட்டியார் கிருஷ்ணவேனி அம்மாள் திருமண மண்டபம், ஜலகண்டாபுரம் |
| 17.06.2025 மதியம் 3.00 | எடப்பாடி கிழக்கு ஒன்றியம் | எம்.ஏ.ஏ.திருமண மண்டபம் வேம்பனேரி. |
| 17.06.2025 மாலை 5.00 | எடப்பாடி மேற்கு ஒன்றியம் | வெங்கடேஸ்வரா தி திருமண மண்டபம், சித்தூர். |
| 18.06.2025 காலை 9.00 | கொங்கணாபுரம் தெற்கு ஒன்றியம் | என்.பி.டி.மஹால் திருமண மண்டபம், கொங்கணாபுரம். |
| 18.06.2025 காலை 11.00 | கொங்கணாபுரம் வடக்கு ஒன்றியம் | திருக்குறள் மண்டபம், புதுப்பாளையம். |
| 18.06.2025 மதியம் 3.00 | எடப்பாடி நகரம் | நடராஜன் மஹால், நைனாம்பட்டி, எடப்பாடி. |

### சங்ககிரி தொகுதி

| தேதி / நேரம் | ஒன்றியம்/ நகரம் | இடம் |
|---|---|---|
| 17.06.2025 காலை 9.00 | தாரமங்கலம் நகரம் | செங்குந்தர் திருமண மண்டபம், தாரமங்கலம். |
| 17.06.2025 காலை 11.00 | தாரமங்கலம் மேற்கு ஒன்றியம் | முருகன் திருமண மண்டபம், துட்டம்பட்டி. |
| 17.06.2025 மதியம் 3.00 | இடங்கணசாலை நகரம் | சமுதாயக்கூடம், இடங்கணசாலை. |
| 17.06.2025 மாலை 5.00 | மகுடஞ்சாவடி தெற்கு ஒன்றியம் | ஆர்.கே.திருமண மண்டபம், மகுடஞ்சாவடி |
| 17.06.2025 இரவு 7.00 | மகுடஞ்சாவடி வடக்கு ஒன்றியம் | எஸ்.ஹெச்.ஜி. பெடரேஷன் பில்டிங், அ.புதூர். |
| 18.06.2025 காலை 9.00 | சங்ககிரி மேற்கு ஒன்றியம் | பருவதராஜகுல சமுதாயக் கூடம், காவேரிப்பட்டி. |
| 18.06.2025 காலை 11.00 | சங்ககிரி கிழக்கு ஒன்றியம் | பி.ஆர்.எம். திருமண மஹால், சேலம் மெயின்ரோடு, சங்ககிரி. |
| 18.06.2025 மதியம் 3.00 | சங்ககிரி நகரம் | சமுதாயக்கூடம், சந்தைபேட்டை, சங்ககிரி |

### மேட்டூர் தொகுதி

| தேதி / நேரம் | ஒன்றியம்/ நகரம் | இடம் |
|---|---|---|
| 17.06.2025 காலை 9.00 | மேட்டூர் நகரம் | கற்பகம் திருமண மண்டபம், மேட்டூர் அணை |
| 17.06.2025 காலை 11.00 | கொளத்தூர் ஒன்றியம் | லட்சுமி திருமண மண்டபம், கொளத்தூர். |
| 17.06.2025 மாலை 4.00 | நங்கவள்ளி வடக்கு ஒன்றியம் | எம்.கே.எஸ்.மஹால் திருமண மண்டபம், கோனூர். |
| 18.06.2025 காலை 9.00 | மேச்சேரி கிழக்கு ஒன்றியம் | தீபம் மஹால், மேட்டூர் மெயின்ரோடு, மேச்சேரி. |
| 18.06.2025 காலை 11.00 | மேச்சேரி மேற்கு ஒன்றியம் | விஜய மஹால் திருமண மண்டபம், மல்லிக்குந்தரோடு, மேச்சேரி. |

இக்கூட்டத்திற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக, வார்டு கழக செயலாளர்கள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், பாகநிலை முகவர்கள் (BLA-2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் (BDA) அனைவரும் அவரவர் ஒன்றிய, நகரத்தில் நடைபெறும் கூட்டத்திற்கு தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**டி.எம்.செல்வகணபதி எம்.பி.**
செயலாளர், சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க.